# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
# TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி

## பொதுத்தேர்வு

## 2021

## வளர் தமிழ் 12

சுட்டெண்: | | | | | | | | |

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100



TEDC

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. மொழிக்கு இறுதியில் வரும் இடையின எழுத்துகளில் ஒன்று

அ) க் ☐ ஆ) ற் ☐
இ) ர் ☐ ஈ) ஞ் ☐

2. ''பதியெழுஅறியாப் பழங்குடி'' எனக் கூறும் நூல்

அ) தொல்காப்பியம் ☐ ஆ) சிலப்பதிகாரம் ☐
இ) மணிமேகலை ☐ ஈ) அகநானூறு ☐

3. சொற்களின் முதலாம் எழுத்து ஒன்றி வருவது

அ) எதுகை ☐ ஆ) உவமை ☐
இ) உருவகம் ☐ ஈ) மோனை ☐

4. இலங்கைக்கு விடுதலை கொடுத்த நாடு

அ) போர்த்துக்கல் ☐ ஆ) பிரித்தானியா ☐
இ) ஒல்லாந்து ☐ ஈ) பிரான்சு ☐

5. சிறுபொழுதுகள்

அ) 4 ☐ ஆ) 2 ☐
இ) 6 ☐ ஈ) 5 ☐

6. ஆரியர் இந்தியத் துணைக்கண்டத்தினுள் நுழைந்தபொழுது அங்கு வாழ்ந்த இனம்

அ) ஆரியர் ☐ ஆ) பறங்கியர் ☐
இ) சிங்களவர் ☐ ஈ) பழந்தமிழர் ☐

7. செயப்படுபொருள் குன்றிய வினை

அ) பாடு ☐ ஆ) வரை ☐

இ) உண் ☐ ஈ) அழு ☐

8. மந்தை மேய்க்கும் மிலேச்சராக இந்தியாவிற்குள் நுழைந்தவர்

அ) தமிழர் ☐ ஆ) சிங்களவர் ☐

இ) ஆரியர் ☐ ஈ) பாண்டியர் ☐

9. நீர் நிலைகளில் பூக்கும் பூ

அ) முல்லை ☐ ஆ) செவ்வரத்தை ☐

இ) ஆம்பல் ☐ ஈ) செவ்வந்தி ☐

10. சுரும்பு என்பதன் பொருள்

அ) தும்பி ☐ ஆ) வண்டு ☐

இ) மொட்டு ☐ ஈ) மலர் ☐

11. இலங்கைத்தீவிலிருந்த மூன்று அரசுகளையும் 1833 இல் ஒன்றிணைத்தவர்

அ) ஒல்லாந்தர் ☐ ஆ) ஆங்கிலேயர் ☐

இ) போர்த்துக்கேயர் ☐ ஈ) ஆரியர் ☐

12. பின்வருவனவற்றுள் நாலறிவுடைய உயிரி

அ) நண்டு ☐ ஆ) நத்தை ☐

இ) எறும்பு ☐ ஈ) பறவை ☐

13. 'எழுத்தாணி ஏந்தும் ஈசர்கள்' என்னும் பாடலை எழுதியவர்

அ) தாமரைக்கண்ணன் ☐ ஆ) அம்பி ☐

இ) சாலை இளந்திரையன் ☐ ஈ ) மன்னார்அமுதன் ☐

14. மெய்முன் உயிர் புணர்தலுக்கோர் எடுத்துக்காட்டு

அ) தமிழீழம் ☐ ஆ) மாங்காய் ☐

இ) பலாவிலை ☐ ஈ ) ஆற்றுநீர் ☐

15. சம்பந்தம் என்பதன் தூய தமிழ்ச்சொல்

அ) தொடர்பு ☐ ஆ) மகிழ்ச்சி ☐

இ) திருமணம் ☐ ஈ ) கொண்டாட்டம் ☐

16. "அனைவரும் மாவீரர் நாளுக்குத் திரண்டு வருக!" இச்சொல்லியம்

அ) ஏவல் ☐ ஆ) கூற்று ☐

இ) வியப்பு ☐ ஈ ) வினா ☐

17. எழுவரை வென்ற இளவல்

அ) நெடுஞ்செழியன் ☐ ஆ) இராசராசன் ☐

இ) கரிகாற்சோழன் ☐ ஈ ) இரும்பொறை ☐

18. ஒழுக்கக்கேடுகளில் மிகவும் இழிந்த கேடு

அ) அடக்கமின்மை ☐ ஆ) இன்னாசெய்தல் ☐

இ) புலால் உண்ணல் ☐ ஈ ) பிறனில்விழைதல் ☐

19. ‘‘புலவர் செந்நாப் பொருந்திய நிவப்பின்.... ’’என்று தொடங்கும் தென்றல் பற்றிய பாடலைப் பாடியவர்

அ) கண்ணதாசன் ☐ ஆ) இளங்கோவடிகள் ☐
இ) பாவேந்தர் ☐ ஈ) நல்லத்துவனார் ☐

20. திருக்குறளில் ஒழுக்கமுடைமை —————— அதிகாரத்தின் பின் வைக்கப்பட்டது.

அ) அன்புடைமை ☐ ஆ) அடக்கமுடைமை ☐
இ) அறிவுடைமை ☐ ஈ) பண்புடைமை ☐

21. அன், அர், உம்

அ) சந்திகள் ☐ ஆ) விகுதிகள் ☐
இ) இடைநிலைகள் ☐ ஈ) பகுதிகள் ☐

22. தேவாரகாலத்தில் தமிழுக்காகக் கடும் பரப்புரை செய்தவர்

அ) ஆறுமுகநாவலர் ☐ ஆ) ஔவையார் ☐
இ) சம்பந்தர் ☐ ஈ) வள்ளுவர் ☐

23. பார்த்தோம் என்பது

அ) எச்சவினை ☐ ஆ) பிறவினை ☐
இ) வினைமுற்று ☐ ஈ) தன்வினை ☐

24. நேற்று நல்ல காற்று. இச் சொல்லியத்தில் தோன்றா உறுப்பு

அ) எழுவாய் ☐ ஆ) பயனிலை ☐
இ) செயப்படுபொருள் ☐ ஈ) அடைமொழி ☐

25. நிலமும் பொழுதும்

அ) கருப்பொருள் ☐ ஆ) முதற்பொருள் ☐

இ) உரிப்பொருள் ☐ ஈ ) மெய்ப்பொருள் ☐

26. குறிஞ்சியும் முல்லையும் தம் இயல்பில் மாறியதால் தோன்றிய நிலம்

அ) குறிஞ்சி ☐ ஆ) பாலை ☐

இ) நெய்தல் ☐ ஈ ) மருதம் ☐

27. குன்றின் அருவிதாழ் மாலைச்சுனை ...... என்ற பாடலைப் பாடியவர்

அ) இளங்கோவடிகள் ☐ ஆ) பாவேந்தர் ☐

இ) நல்லத்துவனார் ☐ ஈ ) பாரதியார் ☐

28. மஞ்சள் பூசி நீராடினாள் என்பது

அ) சினையாகுபெயர் ☐ ஆ) தொழிலாகுபெயர் ☐

இ) குணவாகுபெயர் ☐ ஈ ) இடவாகுபெயர் ☐

29. கல்லோயா என்ற இடத்தின் முன்னைய பெயர்

அ) பட்டிப்பளை ☐ ஆ) கற்குடா ☐

இ) கந்தளாய் ☐ ஈ ) வாகரை ☐

30. கி.பி. 2 ஆம் நூற்றாண்டில் தமிழ்நாட்டில் நுழைந்த வடபுலத்தார்

அ) சோழர் ☐ ஆ) களப்பிரர் ☐

இ) சேரர் ☐ ஈ ) பாண்டியர் ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.**

நான்காவது அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாடு 1974 ஆம் ஆண்டு சனவரி 3 இலிருந்து சனவரி 9 வரை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. அனைத்துலகத் தமிழாராய்ச்சி மாநாட்டைத் தொடக்கி வைத்தவர் தமிழாராய்ச்சி மன்றத்தின் தோற்றுநர் வண.சேவியர் தனிநாயகம் அடிகளார். நான்காவது தமிழாராய்ச்சி மாநாடு யாழ்.வீரசிங்கம் மண்டபத்தில் வைத்து முறைப்படி தொடக்கி வைக்கப்பட்டது. யாழ் நகரம் அலங்கரிக்கப்பட்டு விழாக்கோலம் பூண்டிருந்தது. மாநாட்டின் ஆய்வு நிகழ்வுகள் வீரசிங்கம் மண்டபத்திலும் யாழ். றிமர் மண்டபத்திலும் சிறப்பாக நடைபெற அதன் கலை நிகழ்ச்சிகள் யாழ். திறந்த வெளியரங்கிலும் தமிழர் பண்பாட்டுப் பொருட்காட்சி சுண்டிக்குளி மகளிர் கல்லூரி மண்டபத்திலும் மாலையில் நடைபெற்றன. ஆண்கள், பெண்கள், சிறுவர், முதியோர், இளையோர் என ஐம்பதினாயிரம் தமிழர் அங்கே கூடி இருந்தனர். தமிழ்ச் சொற்கள் தேர்ந்தெடுத்து சுவையூட்டும் தொடர்களாக்கி எடுப்பான குரலில் அமுதமாகப் பொழிந்து கொண்டிருந்தார் பேராசிரியர் ஒருவர். இச் சொற்பொழிவை ஒலி பெருக்கி வழியே அனைவரும் செவிமடுத்துக் கொண்டிருந்தனர். அவ்விடம் தெய்வத்தமிழ்ப் பூசைக்கு உரித்தாயிற்று. பூசை வேளையில் கரடி புகுந்தது போல் காவல் துறையினர் புகுந்தனர். கண்ணீர்ப் புகைக்குண்டுகள் வீசினர்; மக்களைத் தாக்கினர்; மக்களைக் கால்களால் உதைத்தனர்; கண்ணீர்ப் புகை கண்களை எரித்தது; மூக்கினை அடைத்தது; கண்ணீர் விட்டனர்; தண்ணீர் தேடினர்; நாக்கு வறண்டு அழுதனர்; உடைமைகளைப் பறிகொடுத்தனர்; தடுக்கி விழுந்துசிதறி ஓடினர். செந்தமிழர், தீந்தமிழர், பைந்தமிழர் என்றெல்லாம் தமிழரின் பெருமையைப் பேராசிரியர் பேசிக் கொண்டிருந்த வேளை அங்கிருந்த மக்கள் படையினரால் உதைக்கப்பட்டு உயிர்களையும் இழந்தனர். ஆனால் சிதறி ஓடிய தமிழர்கள் போரிடவரவில்லை. அவர்கள் ஒன்றுமறியாத அப்பாவித் தமிழர்கள். தமிழ்மொழியைச் சீராட்ட வந்தவர்கள். ஆனால் காவல்துறையினர் தமிழராய்ச்சி மாநாட்டையே அல்லோல கல்லோலப்படுத்தினர். இதுதான் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழாராய்ச்சி மாநாடு.

1. தமிழாராய்ச்சி மன்றத்தின் தோற்றுநர் யார்?

2. மாநாட்டின் ஆய்வு நிகழ்வுகள் எங்கெங்கே நடைபெற்றன?

3. யாழ்ப்பாணத்தில் எத்தனையாவது தமிழாராய்ச்சி மாநாடு நடைபெற்றது?

4. பூசை வேளையில் எது புகுந்தது போல் காவல்துறையினர் புகுந்தனர் எனக் கூறப்பட்டுள்ளது?

5. இப்பந்தியிலிருந்து நீர் அறிந்து கொண்டது என்ன?

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.**

1. ஆரியரால் மறைத்து வைக்கப்பட்ட தமிழரது நூல்கள் எவை?

2. நீர்ப்பொருள் சுருங்காது என்பதை மிகத் தெளிவாக கூறிய தமிழ்ப்புலவர் யார்?

3. கரிகாற்பெருவளத்தான், பெருஞ்சேரலாதன் ஆகிய இருவரும் போர் புரிந்த இடம் எது?

4. கள்ளிச்செடிக்கு பாலை என்ற பெயர் வரக் கரணியம் என்ன?

5. இன்றைய ஈரான்,ஈராக் ஆகிய நாடுகள் முன்பு எவ்வாறு அழைக்கப்பட்டன?

6. 'கோளொத்த சிறைவைத்தாண்ட கொற்றவன்' எனக் கம்பரால் அழைக்கப்பட்டவன் யார்?

7. மணிப்பவள நடை என்றால் என்ன?

புள்ளிகள் 10

4) **பத்து வரிகளுக்குக் குறையாமல் படத்தைப் பார்த்துக் கவிதை எழுதுக. அல்லது கீழுள்ள கவிதையைத் தொடர்ந்து எழுதுக.**



தம்மை உருக்கித் தமிழருக்கு ஒளி
தந்த எம் மாவீரச் செல்வங்களே

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வரும் சொற்களின் அறுவகைப்பெயர்களையும் இனங்கண்டு எழுதுக.

| | | | |
|---|---|---|---|
| கற்றல் | ______________ | சிறுவன் | ______________ |
| நண்பகல் | ______________ | வேர் | ______________ |
| மருத்துவமனை | ______________ | மகிழ்ச்சி | ______________ |

2. பின்வரும் சொற்களைப் புணர்த்தி எழுதுக.

நாள் + காட்டி ______________

கல் + தாழை ______________

பூ + கொடி ______________

3. ஒவ்வோர் எடுத்துக்காட்டுத் தருக.

தனிமொழி ______________________

உருவகஅணி ______________________

பொதுமொழி ______________________

4. பார்த்தான் என்ற சொல்லை பகுத்து எழுதுக.

______________________________________

5. பின்வரும் சொற்கள் இடம்பெறுமாறு சொல்லியங்கள் எழுதுக.

காலங்காலமாக ______________________________

நடுநடுங்கி ______________________________

புள்ளிகள் 15

## 6) பந்தியை வாசித்து, மூன்றில் ஒரு பகுதியாகச் சுருக்கி எழுதுக.

இவ்வுலகிலே பல்லாயிரக்கணக்கான உயிரினங்கள் வாழ்கின்றன. அவற்றுள் மாந்தன் தனக்குரிய உணவுப் பொருட்களை உற்பத்தி செய்கின்றான். தான் உற்பத்தி செய்யும் உணவுகள் தனக்கு மட்டுமன்றி பிற உயிர்களும் பயன்பெறும் வகையில் செயற்படுகிறான். அதே போன்றே தான் ஈட்டும் பொருட்களைத் தனக்கு மட்டுமல்லாமல் அவை பிறருக்கும் பயன்படும் வகையில் கொடுத்து உதவ வேண்டும். உணவுகளை விளைவித்துத் தருவதோடு, தானே உணவாகவும் இருக்கும் சிறப்பு மழைக்கு உண்டு. எந்த ஒரு எதிர்பார்ப்புமின்றி எமக்கு வாரி வழங்கும் மழையைப் போல, எம்மால் பிறருக்கு வழங்க முடியாவிட்டாலும், எம்மால் முடிந்தளவு பிறருக்குச் சிறு உதவியாவது செய்ய வேண்டும். இச்செயலானது எமது எதிர்காலத்தை மேலும் சிறப்புடையதாக்கும். ஆனால், நாம் பிறருக்கு உதவும் போது பிறரின் தேவை அறிந்து உதவுவதே உண்மையான உதவியாகும். இதனை வள்ளுவரும்,

''வறியார்க்கொன்று ஈவதே ஈகை மற்றெல்லாம்
குறியெதிர்ப்பை நீரது உடைத்து''

என்று கூறியுள்ளார். அதாவது வறியவர்களுக்கு ஒரு பொருளைக் கொடுப்பதே ஈகை எனப்படும். மற்றவருக்குக் கொடுப்பது பயனை எதிர்பார்த்துக் கொடுப்பதாகும். கொடுத்தார்க்குக் குறைவில்லை என்ற முதுமொழிக்கிணங்க, நாம் இல்லாதவர்களுக்கு உதவி நாமும் வாழ்வோம். பிறரையும் வாழ வைப்போம். இதுவே உலக நீதி.

**சுருக்கத்திற்கான குறிப்புகள்:**

- தரப்பட்டுள்ள பந்தியை மீண்டும் மீண்டும் வாசித்து விளங்கிக் கொள்ளல்.
- அதன் உட்கருத்தை அறிதல்.
- உவமைகளையும் எடுத்துக்காட்டுகளையும் கூறியது கூறலையும் தவிர்த்தல்.
- எடுக்கப்பட்ட குறிப்புகளைத் தொகுத்து எழுதுதல்.

புள்ளிகள் 5

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ஈழத்தமிழரும் ஏதிலி வாழ்வும)

- வறுமையின் கொடுமை
  - வறுமை என்றால் என்ன?
  - வறுமையின் கரணியம் ( தொழில்வாய்ப்பு இன்மை, போர்)
  - இளமையில் வறுமையும் அதன் கொடுமையும்
  - வறுமையைப் போக்கும் வழிகள்

- வாசிப்பினால் ஏற்படும் நன்மையும் நூலகத்தின் பங்கும்

புள்ளிகள் 20